# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.21/2023**

**PW–3**

**Date :–07.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மதியழகன் | Caste | |
| த/பெ. | திரு. துளிசி அய்யா, | Calling | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | /2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் தற்போது ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இதற்கு முன்பு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு . கோபிநாத் அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு பரீட்சையம் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் , மாநில குற்ற ஆவண காப்பகம் அவர்களின் R.C.No.D. X/3833/SCRB/2014-B, நாள் 03.4.2020 மற்றும் திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களின் C.No.101/CCRB/TRC/2020 DT.07.04.2020 உத்தரவின்படி முதல் தகவல் அறிக்கைக்கு வரிசை எண் .TRC-E1 589 கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 23.10.2020-ம் தேதி ஸ்ரீரங்கம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு . கோபிநாத் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஸ்ரீரங்கம் திருவானைக்கோவில் சீனிவாசன் நகரை சார்ந்த அய்யாசாமி மனைவி மலர்கொடி என்பவர் கொடுத்த புகார் வாக்கு மூலத்தை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.875/2020

சட்டப்பிரிவுகள் 294(b), 324, இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார் . **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினம் 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிமாறன் , மணிகன்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ .சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினம் 20.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்தான சுமார் 2 ½ அடி நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்று கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ .சா.ஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** பின்னர் (RP.No.12/2023) வழக்கு சொத்தினை படிவம்- 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் . **அந்த படிவம் -91 அ.சா.ஆ 7 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கு சொத்தான ( சுமார் 2 ½ அடி நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்று **அ.சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் திருவானைக்கோவில் அழகிரிபுரம் செக்போஸ்ட் அருகில் இருந்த எதிரி சண்முகம் என்பவரை கடந்த 19.11.2020 ம் தேதி 10.30 மணிக்கு கைத்துகான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்புவித்து உரிய சட்டநடைமுறைகளை பின்பற்றி தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.பின்னர் சாட்சிகள் மலர்கொடி , முகேஷ், ராதா, தமிழ்வாணன்,மணிமாறன், மணிகன்டன், ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . பின்னர் சம்பவத்தில் காயம்பட்ட பரமசிவம் , குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு . இளவரசன் அவர்களை விசாரணை வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவரிடமிருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** ( மருத்துவர் காயத்தின் தன்மை Simple Injury என்று சான்று வழங்கியுள்ளார்). பின்னர் வழக்கின் சட்டப்பிரிவுகளை வழக்கின் தன்மைகேற்ப சட்டப்பிரிவுகள் 294(b), 324, இதசவிலிருந்து

294(b), 324 of IPC, 4 TNPHW ACT **ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார்** . **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ .சா.ஆ.**9 **ஆக குறியிடுசெய்யப்படுகிறது.**காவல் **உதவி ஆய்வாளர் திரு. கோபிநாத் அவர்கள் தனது புலன் விசாரயையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள்** 294(b), 324 of IPC, 4 TNPHW ACT **கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்**.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–</u>**

**பொய்யான புகார் வாக்குமூலம் பெற்று முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு கோப்புகளிள் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் . வழக்கில் எந்தவித சான்றுபொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல . வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல . காவல் உதவி ஆய்வாளர் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

Sd/-xxxx

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
***Srirangam.***